செ.வெ.எண்.108 நாள்:22.02.2018

**திருநெல்வேலி மாவட்டம்**
**சுய தொழில் தொடங்க முதல் பட்டதாரிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் தழைத்தோங்கவும், புதிய தொழில் நிறுவனங்கள் அதிகரிக்கவும், படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்க - மானியத்துடன் வங்கிக் கடன் உதவி பெற - புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) தமிழக அரசால் கீழ்க்கண்ட தகுதிகளுடன் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட தொழில் மையம் மூலம் தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் கடந்த 5 ஆண்டுகளில் 81 தகுதியுள்ள நபர்களுக்கு 6 கோடியே 19 லட்சம் மானியத்துடன் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற குறைந்த பட்சம் இளங்கலை பட்டப்படிப்பு, டிப்ளமோ, ஐ.டி.ஐ., மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழிற்பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்த பட்சம் 21 வயது முடிவடைந்தவராகவும், பொதுப்பிரிவினர் 35 வயதிற்கு மிகாமலும், பெண்கள் / தாழ்த்தப்பட்டவர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டவர் / மிகவும் பிற்படுத்தப்பட்டவர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / திருநங்கைகள் / மாற்றுத்திறனாளிகள் ஆகிய சிறப்புப் பிரிவினர் 45 வயதிற்கு மிகாமலும் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானத்திற்கு உச்ச வரம்பு இல்லை. இத்திட்டத்தில் சேவை மற்றும் உற்பத்தி தொழில்களுக்கு ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.1 கோடி வரையும் அனுமதிக்கபடுகிறது. தகுதியான பயனாளிகள் www.msmeonline.tn.gov.in/needs என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான தேர்வுக்குழுவினரால் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு வங்கி மூலம் நிதி ஒப்புதல் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு ஒரு மாத கால தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்குப் பின் திட்ட மதிப்பில் 25% அதிக பட்சமாக ரூ.25/- இலட்சம் வரை அரசு மானியம் வழங்கப்படும். முறையாக கடனை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில், பின் முனை வட்டி மானியமாக 3% மும் வழங்கப்படும். இத்திட்டத்தின் பயன்பெற தகுதியான நபர்கள் மாவட்ட தொழில் மையத்தை அணுகி பயன்பெறலாம். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.